# சாரதிப்பத்திரம்

சுவிஸில் கார் அல்லது மோட்டார்வண்டி ஓடவேண்டுமாயின் செல்லுபடியான சாரதிப்பத்திரம் வைத்திருக்கவேண்டும். வெளிநாட்டுச் சாரதிப்பத்திரங்கள் சுவிஸில் குடியேறிய பின்பு மாற்றப்படலாம்.

## வெளிநாட்டுச் சாரதிப்பத்திரம்

வெளிநாட்டுச் சாரதிப்பத்திரத்துடன் சுவிசுக்குக் குடியேறுபவர்கள் குடியேறி 12 மாதங்களுக்குள் சுவிஸ் சாரதிப்பத்திரத்திற்கு மாற்றவேண்டும். அதற்காக ஒரு விண்ணப்பம் எழுதி மாநில வீதிப்போக்குவரத்து இலாகாவுக்கு (Strassenverkehrsamt | Office de la circulation routière) அனுப்பவேண்டும். எந்த நாட்டின் சாரதிப்பத்திரம் என்பதைப் பொறுத்து மாற்றுவதற்குரிய சட்டதிட்டங்களும் வேறுபடும். சோதிப்பதற்காக ஓடிக்காட்ட வேண்டி வரலாம் அல்லது சுவிஸ் கோட்பாடு சோதனை எழுதவும் வரலாம். மேலதிக தகவல்களுக்கு பேர்ண் மாநில வீதிப்போக்குவரத்து இலாகாவை நாடலாம்.

## சாரதிப்பரீட்சை

சுவிஸில் ஒரு சாரதிப்பத்திரம் பெறுவதற்கு பரீட்சை அவசியம். சாரதிப்பரீட்சையில் ஒரு கோட்பாடும் செய்முறையும் உண்டு. 18 வயதிற்கு மேற்பட்டால் தான் பரீட்சைக்குப் போகலாம். அறோ மாநிலத்தில் கோட்பாடுப் பரீட்சையை டொச் பிரெஞ் மற்றும் இத்தாலி மொழிகளில் ஏதாவதொன்றில் எழுதலாம். இதற்குரிய முன்நிபந்தனை கள் மற்றும் சரியான நடைமுறைகள் பற்றி வீதிப்போக்குவரத்து இலாகா அறியத் தரும். பாரிய வாகனங்கள் பஸ்கள் டாக்ஸி ஓடுவதற்கு விசேடமான பரீட்சைகள் செய்யவேண்டும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/mobility/drivers-license